தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்

| |
|---|
| நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)** |

**நவம்பர், திசம்பர் - 2016**

**A031** தமிழக வரலாறு

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு – 1

ஒருசொல் / தொடரில் விடை தருக. (15 X 1 =15)

1. பழனி மலையில் தோன்றும் ஆறு எது?
2. களப்பிரரின் வரலாற்றை அறிய உதவும் செப்பேடு எது?
3. மதுரா விஜயத்தின் ஆசிரியர் யார்?
4. குறிஞ்சி நிலமக்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
5. தென்மேற்குப் பருவகாற்று வீசுவதைக் கண்டறிந்த கிரேக்கர் யார்?
6. யானைகள் நிறைந்த காட்டின் பெயர் என்ன?
7. வரி பற்றிய கணக்குகளைப் பராமரித்தவர் எவ்வாறு அழைக்கப்பட்டார்?
8. களப்பிரர் காலத்தை எவ்வாறு அழைப்பர்?
9. முற்காலப் பாண்டியரில் முதன்மையானவர் யார்?
10. சுங்கம் தவிர்த்த சோழனைக் குறிப்பிடுக.
11. இருவகைக் கூத்துகள் யாவை?
12. சரசுவதி மஹால் யாரால் நிறுவப்பட்டது?
13. சலகண்டேசுவரன் கோயிலைக் கட்டியவர் யார்?
14. பெங்களூரைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் யார்?
15. சிறுகதையின் மன்னன் என்று அழைக்கப்படுபவர் யார்?

## பிரிவு– 2

எவையேனும் 5 வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5 X 3=15)

1. ஆனைமலை குறித்து சிறுகுறிப்பு வரைக.
2. பழந்தமிழகத்தின் புவியியல் கூறுகளை ஆராய்ந்தவர்கள் குறிப்பிடும் தலையாய கூறுகள் யாவை?
3. நெய்தல் நில மக்களின் தொழிலைக் குறிப்பிடுக.
4. உதியன் சேரலாதன் ஆற்றிய அரிய செயல்களைக் கூறுக.
5. இருண்ட காலத்தில் நிலவிய சமயங்கள் எவையெவை?
6. திருமலை நாயக்கர் குறித்து எழுதுக.
7. ஏகோஜியின் நிருவாக முறையை எழுதுக.
8. சி.வை. தாமோதரம் பிள்ளை பதிப்பித்துள்ள நூல்களைக் குறிப்பிடுக.

## பகுதி – 3

மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3X 15=45)

1. (அ) தமிழக வரலாற்றை அறிய உதவும் தொல்பொருள் சான்றுகள் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பழந்தமிழகத்தின் ஐவகை நிலப்பாகுபாடுகளை விவரிக்க.

2. (அ) சங்க கால ஆட்சி முறை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பல்லவரின் கலைத்தொண்டினைச் சான்றுடன் விவரிக்க.

3. (அ) அயலவர் குறிப்பின் வழி அறியலாகும் பிற்காலப் பாண்டியர் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) விடுதலைப்போரில் ஈடுபட்ட தமிழகத் தலைவர்கள் குறித்துக் கட்டுரை வரைக.

***